செ.வெ.எண்:42
நாள்: 20.04.2021

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கோயம்புத்தூர்

ந.க.எண்.5025/2021/ஓ3

நாள்:20.04.2021

## பத்திரிக்கை செய்தி

கோயம்புத்தூர் மாவட்டத்தில இராணுவ ஆட்சேர்ப்பு அலுவலகத்தினால் கடந்த ஜனவரி 2021 மாதத்தில் நீலகிரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், திண்டுக்கல், மதுரை, தேனி, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 11 மாவட்டங்களுக்கான இந்திய இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு முகாமானது நடத்தி முடிக்கப்பட்டது. இந்த இராணுவ ஆட்சேர்ப்பு முகாமில் கலந்து கொண்டு தகுதிபெற்றவர்களுக்கு இராணுவப்பணியில் உள்ள Soldier Technical, Soldier Nursing Assistant, Soldier, Clerk/Store Keeper, Soldier General Duty and Soldier tradesman வகையிலான பணியிடங்களுக்கான பொது நுழைவுத்தேர்வு கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள நேரு விளையாட்டு அரங்கில் எதிர்வரும் **25.04.2021** அன்று நடத்த திட்டமிடப்பட்டது. தற்போதைய கோவிட்-19 கொரனா தொற்று காரணத்தினால் மேற்படி 25.04.2021 அன்று நடத்துவதாக இருந்த இராணுவ ஆட்சேர்ப்பிற்கான பொது நுழைவுத்தேர்வானது காலவரையின்றி ஒத்தி வைக்கப்படுவதாக கோயம்புத்தூர் இராணுவ ஆட்சேர்ப்பு அலுவலக ஆட்சேர்ப்பு இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நுழைவுத்தேர்விற்காக ஏற்கெனவே வழங்கப்பட்ட நுழைவுச்சீட்டு இரத்துச் செய்யப்படுகிறது. பொது நுழைவுத்தேர்விற்கான புதிய தேதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும், புதிய தேதி அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்விற்கான நுழைவுச்சீட்டினை கோயம்புத்தூர் இராணுவ ஆட்சேர்ப்பு அலுவலகத்திலோ அல்லது இந்திய இராணுவத்திற்கான www.joinindianarmy.nic.in இணையதளத்தின் வாயிலாகவோ பெற்றுக் கொள்ளலாம். மேலும் மேற்படி இராணுவ ஆட்சேர்ப்பிற்கான பொது நுழைவுத்தேர்வு நடத்தப்படும் புதிய தேதி குறித்த அறிவிப்பிற்கு மேற்படி இந்திய இராணுவத்திற்கான இணையத்தளத்தினை தொடர்ந்து பார்வையிட்டு அறிந்து கொள்ளுமாறும் தேர்வு எழுதும் விண்ணப்பதாரர்களுக்கு இதன் வாயிலாக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

20/4/21

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கோயம்புத்தூர்.

பெறுநர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
கோயம்புத்தூர்

அனைத்து பத்திரிக்கை (ம) ஊடகங்களிலும் தவறாது பிரசுரம் செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

20/4/21